களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Kalanjiyam - International Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Quarterly Journal*
*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 03 August 2025*
https://doi.org/10.63300/kirjts04032025

# தேடல் புதினத்தில் மீனவர் வாழ்வைச் சுரண்டும் முதலாளித்துவம்

## Unveiling the Struggles: Capitalism's Grip on Fishermen's Lives in the Novel Thedal

**திருமதி சு.வினோதா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் – 05
Mrs. **S. Vinotha,** Assistant Professor,
Department of Tamil at Sona College of Arts and Science,
Salem – 05
Email: srimegha775@gmail.com

**Abstract:**

This research paper discusses the unique and ancient livelihood of traditional fishermen who rely on the simple Kattumaram (catamaran) as a foundational symbol of their labor, culture, and economic survival. This community is currently facing a severe crisis driven by modern capitalism, the unchecked intrusion of deep-sea mechanized fishing vessels, and detrimental government policies, which together have resulted in the seizure of their traditional resources and profound socio-economic marginalization. Ponneelan's novel, Thedal (The Search), is highlighted as a significant literary work that meticulously documents the historical moment when this oppressed fishing community awakens, uniting politically to form trade unions and fight for the recovery of their traditional rights and self-respect. This research aims to analyze the structural oppression faced by the Kattumaram fishermen as depicted in Thedal, examining the importance of their collective action through the lens of class struggle. Ultimately, the study seeks to establish, from a sociological perspective, that the Kattumaram is not merely a vessel but a crucial symbol of economic freedom, and its successful reclamation is indispensable for achieving social justice.

**Keywords**: Fishing, Fisher men, Fishing association, Capitalism, Catemaron.

**ஆய்வுச் சுருக்கம்:**

மனித சமுதாயத்தின் தொன்மையான மற்றும் பாரம்பரியத் தொழில்களுள் கடலையே நம்பி வாழும் மீன்பிடித்தொழில் மிகவும் தனித்துவமானது. இயற்கை சார்ந்த இத்தொழில், தலைமுறை தலைமுறையாக மீனவ சமூகத்தின் வாழ்வாதாரமாகவும் கலாச்சார அடையாளமாகவும் திகழ்கிறது. நாள் முழுவதும் கடலின் சீற்றத்தையும் எதிர்பாராத ஆபத்துகளையும் எதிர்த்து, உயிருக்கும் உழைப்பிற்கும் சவால் விடும் இத்தொழிலில், மீனவர்களின் உயிரையும் வாழ்வாதாரத்தையும் தாங்கிப் பிடிக்கும் அடிப்படைச் சக்தியாகவும், நம்பிக்கையின் குறியீடாகவும் 'கட்டுமரம்' என்னும் எளிய சாதனம் நிலைபெறுகிறது. ஆனால், சமகாலத்தில் நவீன முதலாளித்துவத்தின் பேராசையினாலும் ஆழக்கடல் மீன்பிடி எந்திரங்களின் ஊடுருவலாலும் மீனவ சமூகம் கடுமையான நெருக்கடியைச் சந்திக்கிறது. பாரம்பரிய உரிமைகளும் வளங்களும் பெரு முதலாளிகளாலும், அரசின் திட்டமிடப்படாத மீன்பிடிக் கொள்கைகளாலும் பறிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, கட்டுமரத்தை ஆதாரமாகக் கொண்ட

உழைக்கும் மீனவர்கள், வளச் சுரண்டலுக்கு உள்ளாகி, பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் புறக்கணிக்கப்படும் அவலம் தீவிரமடைகின்றது. அத்தகு ஒடுக்குமுறைக்கு எதிராக, தமது சுயமரியாதையையும் பாரம்பரிய வாழ்வாதாரத்தையும் மீட்டெடுக்க விழிப்புறுகின்ற மீனவ சமூகம், அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து, தொழிற்சங்கமாகத் திரண்டு போராடும் வரலாற்றுத் தருணங்களை நுட்பமாகப் பதிவு செய்யும் இலக்கியப் படைப்புகளில் பொன்னீலனின் 'தேடல்' புதினம் முதன்மையானதாகும்.

இந்த ஆய்வு, கட்டுமர மீனவர்கள் சந்தித்திருக்கும் கட்டமைப்பு ரீதியான ஒடுக்குமுறைகள் எவ்வாறு புதினத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதையும், சுரண்டலை எதிர்த்து அவர்கள் மேற்கொள்ளும் கூட்டுச் செயல்பாட்டின் முக்கியத்துவத்தையும் வர்க்கப் போராட்டத்தின் பின்னணியிலிருந்து ஆராய்கிறது. குறிப்பாக, கட்டுமரம் என்பது வெறுமனே ஒரு படகல்ல, அது அவர்களின் பொருளாதாரச் சுதந்திரத்தின் குறியீடு என்பதையும், அது மீட்கப்படுவதே சமூக நீதி என்பதையும் 'தேடல்' புதினத்தின் வழியே சமூகவியல் பார்வையில் நிலை நிறுத்துவதே இந்த ஆய்வின் இலக்காகும்.

**திறவுச்சொற்கள்:** *மீன்பிடித்தொழில், மீனவர்கள், மீனவர் சங்கம், முதலாளித்துவம், கட்டுமரம்*

**முன்னுரை**

உலகமயமாகிவிட்ட இன்றைய சூழலில் பாரம்பரிய மரபு சார்ந்த பல்வேறு செயல்பாடுகள் மாற்றமடைந்துள்ளன. குறிப்பிட்ட மண் சார்ந்த வாழ்வியல் பொதுப் பழக்கவழக்கத்தின் காரணமாக வேறு அவதாரம் எடுத்து வருகின்றன. இத்தகு மாற்றங்களுள் மண் சார்ந்த தொழில்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் ஒன்று. உழவு, மீன்பிடித்தொழிலும் இம்மாற்றத்தால் தனது மரபுத்தன்மையை இழந்து வருகின்றன. இயந்திரமயமாக்கப்படல், அரசின் தலையீடு உள்ளிட்ட காரணங்களால் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் மரபு சார்ந்த பாரம்பரியத் தொழிலை மக்கள் இழந்து கிடைக்கும் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். பாரம்பரிய தொழிலை மக்களிடமிருந்து பறிக்கும் போது அத்தொழில் சார்ந்து காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் தொழில் நுணுக்கங்கள் இருந்த இடம் தெரியாமல் தொலைந்து போகின்றன. இந்நிலை குறித்த விழிப்புணர்வைப் படைப்பாளர்கள் காலங்காலமாகப் படைத்துத் தங்களது சமூக அக்கறையைப் பதிவு செய்து வருகின்றனர். அத்தகு படைப்புகளுள் பொன்னீலன் அவர்களின் தேடல் புதினம் குமரி மாவட்டத்து மீனவர்களின் பாரம்பரியம் அரசாலும் முதலாளித்தவத்தாலும் பறிக்கப்படும் நிலை கதைக்கரு வாயிலாக விளக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதனை அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தேடல் புதினம் – அறிமுகம்**

தேடல் புதினம் கன்னியாகுமரி மாவட்டத்து மீனவர்களின் வாழ்வியலை மையமாகக் கொண்ட பொன்னீலனால் படைக்கப்பட்ட ஒரு சமுதாய நாவலாகும். பொன்னீலன் கம்யுனிச சித்தாந்த எண்ணம் கொண்டவர். கம்யுனிசத்தால் ஈர்க்கப்பட்டு அத்துறை சார்ந்த சிந்தனைகளைப் பெற்று மக்களுக்கு விழிப்பணர்வு தரும் வகையில் தனது படைப்புகளை அமைத்துக் கொண்டவர். உழைப்பாளிகளை அண்டி அவர்களது உழைப்பைச் சுரண்டி வாழும் முதலாளித்துவ சக்திகளின் சுயநல மோச வலையை

**தேடல் புதினத்தில் மீனவர் வாழ்வியல்**

இரண்டு மரங்களின் கூட்டு சேர்க்கையால் உருவாக்கப்படும் கட்டுமரம் மீனவர்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கின்றது. மீனவர் வாழ்வியல் மீனவர் வாழ்வியலின் அடிப்படையான மீனவத் தொழிலைச் சுற்றியும் அதன் துணைத்தொழில்களான வலை பின்னுதல், மீன் விற்றல், கருவாடு செய்தல் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டும் மேற்கொள்ளப்படுபவை.

**கட்டுமரத்தை நம்பியிருத்தல்**

மீனவர்கள் கட்டுமரம் வைத்திருப்போர் கட்டுமரம் சார்ந்த பணியாளர்கள் என்று இரண்டு வகைகளில் அடையாளப்படுகின்றனர். கட்டுமரத்தின் உரிமையாளரும் மீனவர்களாகவும் கட்டுமரப் பணியாளர்களைக் கொண்டு மீன்பிடித்தொழிலை மேற்கொள்பவர்களாகவும் இருப்பர். மீனவர்கள் முழுமையாக மீன்படித்தொழிலையும் கட்டுமரத்தையுமே நம்பியிருக்கின்றனர். கடலுக்குள் சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் வலையை வீசி வைத்துவிட்டு வந்துவிடுவர். இரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் கடலுக்குள் சென்று வீசிய வலையையும் அதில் சிக்கியுள்ள மீன்களையும் கரைக்குக் கொண்டு வருவது அவர்களின் வழக்கமாக அமைந்திருக்கும். இவ்வாறு வீசப்பட்ட வலைகளுக்குள் மீன்கள் சிக்குவதற்காகக் கரையில் இருக்கும் போதே அதற்குள் சிறுசிறு முரல் மீன்களைப் பிடித்து வலைகளுக்குள் கட்டி வைப்பர் என்று மீன்பிடி நுணுக்கம் குறித்துப் பொன்னீலன் தனது தேடல் புதினத்தில் பதிவு செய்துள்ளார். மீனவர்கள் கட்டுமரத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துள்ளனர் என்பதும் அவரது தேடல் புதினத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. இயற்கைச் சீற்றத்தின் காரணமாகக் கடலுக்குள் செல்ல முடியாமல் மீன்பிடித்தொழில் தடைப்பட்ட போதிலும் அவர்கள் வேற்றுத்தொழிலை நம்பிச் செல்வதில்லை. மாறாக சீற்ற காலம் தணிவதற்காகக் காத்திருந்து மீண்டும் கட்டுமரத்திலெறி மீன்பிடிக்கச் செல்கின்றனர்.

**மீன்பிடி வலை**

மீன்பிடித்தொழிலில் வலையே முதன்மையான கருவியாக அமைகின்றது. ஒரு சில மீன்வகைகளுக்கென்று தனி வலை வீசப்படுகின்றது. பொன்னீலன் தனது தேடல் புதினத்தில் இறால் மீன்களுக்கு நைலான் வலை வீசப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**“வன்கைப் பரதவர் இட்ட செங்கோல்**

**கொடுமுடி யவ்வலை பரியப்போக்கி” (புலியூர்க்கேசிகன் (உ.ஆ), நற்றிணை, பா.எ.303)**

என்னும் வரிகள் இறால் மீன்களைப் பிடிப்பதற்குரிய வலைகள் இலைகளற்ற மரத்தின் நிழல்களைப் போன்று நுட்பமுடையதாகக் காணப்பட்டதாகப் பதிவிட்டிருப்பது காலங்காலமாக இறால் மீன்களைப் பிடிப்பதற்கென்று தனி வலைகள் பயன்படுத்தப்பட்ட செய்தியை அறிய முடிகின்றது.

**மீன் வியாபாரம்**

மீனவர்கள் கடலில் பிடித்த மீன்களைக் கரைக்குக் கொண்டு வந்து கடல் மண்ணால் திட்டு ஒன்றை உருவாக்கி அதில் பிடித்த வந்த மீன்களைக் கொட்டி ஏலம் போட்டு வியாபாரம் செய்வது வழக்கம். கடும் உழைப்பால் மீனவர்கள் ஈட்டிய மீன் செல்வத்தை மீன் ஏஜென்ட்டுகள் ஏலத்தில் மொத்தமாக வாங்கிச் சென்று சில்லறை வியாபாரிகளுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் விற்பர். (இவ்வாறு பணம் வீசிய ஏஜென்டுகளில் மிக்கேல் மகன் ரூபனும் ஒருவன். படித்த இளைஞனான அவனுக்குத்

தகப்பனின் கடல் தொழில் விருப்பமில்லை. விலையுயர்ந்த வெளிநாட்டு லுங்கியும் மடிப்புக் கலையாத சட்டையும் அணிந்து கொண்டு அவன் கடற்கரையில் தரகனாகத் திரிந்தான்" (பொன்னீலன், தேடல், ப.4) என்னும் வரிகள் மீனவர்களின் பிள்ளைகள் உழைப்பு மிகுந்த மீன்பிடித்தொழிலில் நாட்டமின்றி மீன் தரகர்களாக மாறி வரும் நிலையைப் பொன்னீலன் தனது தேடல் புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

**அலையுடனான போராட்டம்**

மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் ஒவ்வொரு நாளும் மரணத்தோடு போராடுகின்றனர். புயல் உருவாகிக் கடலுக்குள் செல்ல முடியாத காலத்திலும் பிழைப்பு தேடிக் கடலுக்குள் செல்கின்றனர். மீனவர்களின் இத்தகு நிலைக்காகக் கடல் இரக்கப்பட்டுப் புயல் காலங்களிலும் கடலுக்குள் அனுமதிப்பதுண்டு. பல நாட்கள் கடல் சீற்றத்தால் கடலுக்குள் நுழைய முடியாதபடி விரட்டியடிப்பதும் உண்டு. அதோடு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் சூழலில் திடிரென்று புயல் தாக்கத்தால் நிலை குலைந்து கடலுள் மூழ்கி இறப்பதும் உண்டு. **"அலையுடன் அல்லாடிக் கொண்டிருக்கும் தங்கள் உயிருக்கினியவர்களை எதிர்பார்த்துத் துடிதுடிக்கும் நெஞ்சைக் கைகளால் அமுக்கிக் கொண்டு கரைகளில் நின்று கொண்டிருப்பார்கள்"** (பொன்னீலன், தேடல், ப.9) என்னும் தேடல் புதின வரிகள் அலையுடன் போராடும் மீனவர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இத்தகைய மீனவர்களின் நிலையற்ற வாழ்வினைத் தேடல் புதினத்தில் பொன்னிலன் பதிவு செய்துள்ளார். கதைத்தலைவியான சில்வியின் தந்தை சில்வருசு மீன்பிடிக்கச் சென்ற சூழலில் சீற்றத்தால் கடலுள் மூழ்கி இறந்து போகிறார். இதனால் அவரது வருமானத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து வரும் சில்வருசுவின் தாயாரும் மகள் சில்வியும் நிர்க்கதி ஆகின்றனர்.

**மீனவர்களின் இருப்பிடம்**

கடலை நம்பித் தொழில் செய்யும் மீனவர்கள் தங்களின் வாழிடத்தைக் கடற்கரையோரமாக அமைத்துக் கொள்வது என்பது காலங்காலமாக நடைபெற்று வரும் பழக்கமாகும். தொழில் செய்வதற்கு வசதியாகத் தங்களின் வாழிடத்தை அவர்கள் அவ்வாறு அமைத்துக் கொள்கின்றனர். கடலைப் பார்த்தவாறு கடற்காற்றைச் சுவாசித்தவாறு கடலின் பருவ நிலை மாற்றங்களை உணர்ந்தவாறு அவர்களது நாட்கள் கடந்து செல்லும். இவ்வாறு அமைந்த அவர்களது வாழ்க்கை நிலை கடலில் ஏற்படும் சீற்றங்களால் கடல் நீர் பொங்கி கடற்கரையோரங்களில் இருக்கும் மீனவர்களின் வாழிடத்தை அழித்துவிடுகின்றன. இத்தகு நிலையற்ற வாழிடச்சூழல் காரணமாக அவர்கள் தங்களது வீடுகளைத் தற்காலிகத் தங்குமிடங்களாகவே அமைத்துக் கொள்கின்றனர். தட்டிகளையும் கட்டைகளையும் கூரைகளையும் வைத்துக் குடிசைகள் அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். இத்தகு நிலையற்ற வாழிடச் சூழலைத் தேடல் புதினம் பதிவு செய்துள்ளது. கடல் சீற்றத்தால் சில்வியோடு சேர்த்த வேறு சில மீனவர்களின் குடிசைகளும் அடித்துச் செல்லப்படுகிறது. வீடுகள் அழிக்கப்பட்ட போதிலும் மீனவர்களின் வாழ்க்கைப் போக்கில் மாற்றமோ தொய்வோ ஏற்படவில்லை. மாறாக தாஸன் அவளுக்குத் தனது வீட்டைக் கொடுத்துவிட்டுத் தனக்கு மேட்டு நிலத்தில் புதிதாக ஒரு குடிசை கட்டிக் கொள்கின்றான். இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டாலும் விரைவில் கட்டி முடித்துக் கொள்கின்ற

அதிக பொருட் செலவை ஏற்படுத்தாத இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு வாழும் மீனவர்களின் நிலையற்ற வாழ்வியல் இதன் வழி புலப்படுகின்றது.

**முதலாளித்துவத்தின் ஆதிக்கம்**

உலகம் முழுவதிலும் முதலாளித்துவம் வேர் விட்டுக் கிளை பரப்பி வளர்ந்து வருகின்றது. பாரம்பரிய மரபு சார்ந்த தொழில்களையும் அது விட்டு வைக்கவில்லை. முதலாளித்துவ ஆதிக்கம் குமரி மாவட்டத்து மீனவர்களின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பொன்னீலன் தனது தேடல் புதினத்தில் பதிவு செய்துள்ளார். கட்டுமரத்தில் ஏறிக் கடலுக்குள் சென்று மீன் அதிகம் இருக்கும் இடத்தை அனுமானித்து வலை வீசி வலை நிறைய மீனை அள்ளி வந்து கரையில் விற்றுப் பிழைப்பு நடத்தும் மீனவர் வாழ்க்கையை முதலாளிமார்களின் ஆதிக்க கரங்கள் பிடுங்கிக் கொள்கின்றன.

**உழைப்பை உறிஞ்சும் இயந்திரங்கள்**

இயந்திரங்கள் உழைக்கும் வர்க்கத்தின் எதிரிகளாக மாறிவிட்டன. மனித சக்தியின் இடத்தை இயந்திர சக்திகள் பிடித்துக் கொண்டன. பாரம்பரியத் தொழில் செய்யும் தொழிலாளர்கள் அந்தந்த நிலத்தில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு கருவி செய்து அதன் வழியே பிழைப்பு நடத்துவர். அத்தகைய உழைப்பால் ஈட்டும் பயனை இயந்திரங்கள் கேள்விக்குள்ளாக்கியுள்ளன. பணம் படைத்த முதலாளிகள் தங்களது பணத்தை முதலீடு செய்து பெரும்பணம் ஈட்டுகின்றனர். அவ்வாறு முதலீடு செய்வதற்குப் பாரம்பரியமிக்க தொழில்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மரபு சார்ந்த தொழிலாளர்கள் எளிய தொழிற் கருவிகளைக் கொண்டிருக்க முதலாளிகளோ பெரும் பொருட் செலவு செலவு செய்து இயந்திரத்தில் இயங்கும் தொழிற் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். தேடல் புதினத்தில் மீனவர்கள் கட்டுமரத்தை நம்பித் தங்களது உடல் உழைப்பை முதலீடு செய்துள்ளனர். ஆனால் பணம் படைத்த முதலாளிகள் இயந்திரப் படகுகள் விட்டுக் கடலின் மொத்த வளத்தையும் பறித்துக் கொள்கின்றனர் என்று பொன்னீலன் பதிவு செய்துள்ளார். **“ஓரு போட்டு இருக்கும்னா ஊர்க்காரன் பிடிக்குற அவ்வளவு மீனையும் ஒற்றையில் பிடிக்கலாம்”** (பொன்னீலன், தேடல், ப.25) என்று ரூபன் இயந்திரப்படகால் கிடைக்கும் லாபம் குறித்துச் சுயநலமாய்ப் பேசுகின்றான். **“எந்திரப்படகு மொதலாளித்துவத்தோட மிதக்கும் வேரு”** (பொன்னீலன், தேடல், ப.43) என்று தாசன் இயந்திரப்படகிற்குப் பின்புலமாய் நிற்கும் முதலாளித்தவத்தை அடையாளம் காட்டுகின்றான். இவ்வாறு பொன்னீலன் தனது தேடல் புதினத்தில் பாத்திரங்களின் வழி இயந்திரப்படகுகளால் எளிய மக்களின் உழைப்பைப் பிடுங்கும் முதலாளித்துவத்தை அடையாளம் காட்டுகின்றார்.

**பொன்னீலன் தரும் தீர்வு**

பொன்னீலன் அடிப்படையில் ஒரு பொதுவுடைமைவாதி. எனவே தனது படைப்புகளில் பொதுவுடைமைவாதத்தை முன்வைப்பது அவரது வழக்கங்களில் ஒன்று. புதிய மொட்டுகள் புதினத்தில் சுதந்திரராஜன் என்னும் பாத்திரத்தின் வழி பொதுவுடைமைவாதத்தை முன்வைத்தார். தொழிலாளர்களுக்கு அவர்களின் உரிமைகளைக் கோரும் பொருட்டு சங்கம் அமைத்துப் போராடக் கற்றுக் கொடுப்பதாகக் கதைக்களம் அமைத்திருந்தார். அதே போன்று தனது தேடல் புதினத்தில் இயந்திரப்படகால் மீனவர்கள் பாதிக்கப்படல், வலை பின்னும் தொழிலை அரசு நடத்தல் போன்றவற்றை எதிர்த்து மீனவர்கள் சங்கம் அமைத்துப் போராடுவதாகக் கதை நிறைவுறுவதாக அமத்துள்ளார். இத்தகு

சங்கங்களில் பெண்கள், ஆண்கள் என்று அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். நமக்கான உரிமைகளுக்காக நாம் தான் போராட வேண்டும். போராட்டத்திற்கு ஆண்பெண் வேறுபாடோ, முதியவர் இளையவர் என்ற பாகுபாடோ பார்த்துப் பின்வாங்கக் கூடாது. அனைவரும் சேர்ந்த போராடினால் தான் நமது வாழ்க்கைக்கான விடிவு கிடைக்கும் என்பது உழைப்பாளிகளுக்கான தீர்வாகப் பொன்னீலன் முன் வைக்கும் கருத்துகளாகும்.

## தொகுப்புரை

- ❖ மீன்பிடித்தொழிலில் பாரம்பரியமாக ஈடுபடும் மீனவர்கள் கட்டுமரத்தை மட்டுமே நம்பி நிறைவாக வாழ்ந்த முற்காலத்து நிலை பொன்னீலனின் தேடல் புதினத்தின் வழி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- ❖ அலையுடன் போராடும் போராட்ட வாழ்க்கையே ஆனாலும் அதையும் ஏற்றுக் கொண்டு மக்கள் உழைக்கத் தயாராகி நிற்கும் நிலை உழைப்பாளிகளின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.
- ❖ கடினமான வாழ்க்கைச் சூழலிலும் நிறைவாக வாழும் மீனவர்களின் வாழ்வில் முதலாளிமார்களின் இயந்திரப்படகுகள் ஏறபடுத்திய தொய்வு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- ❖ ஏழை உழைப்பாளிகளின் உழைப்பை முதலாளிமார்களின் சுயநலமிக்க முதலாளித்துவம் பாதித்த சூழல் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.
- ❖ உழைக்கும் சமுதாயத்தைப் பாதிக்கும் முதலாளித்துவ ஆதிக்கத்தைத் தகர்க்கும் தீர்வாகச் சங்கம் அமைத்துப் போராடச் செய்த நிலை படைப்பாளரின் சமுதாயக்கடமையாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது புலனாகின்றது.
- ❖ இவ்வாறு முதலாளித்துவம் சாதாரண மக்களின் வாழ்வில் ஏற்படுத்தும் எதிர்மறையான மாற்றங்களையும் அதற்கு மக்கள் தங்களது சார்பில் போராட முன் வர வேண்டியதன் அவசியத்தையும் பொன்னீலனின் தேடல் புதினத்தின் வழி இக்கட்டுரை எடுத்துரைத்திருப்பது தெளிவாகின்றது.

**References:**


- Ponnilanan. 2010. *தேடல்* [Thedal]. New century book house.



நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work



**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.


KALANJIYAM